# மாய மோகினி

# Maya mohini

சுஜா சந்திரன்

மாய மோகினி 1

போக ஆசையைத் தூண்டும் தேவனுக்கு பெயர் காமன்.. கண்ணனின் மேல் காதல் கொண்ட ஆண்டாள் கண்ணனுக்கும் தன்மேல் ஆசை வருவதற்காக காமனையும் அவன் தம்பி சோமனையும் நாடுகிறாள்.. அதனால் தான் காமனும் அவன் மனைவி ரதியும் மக்களால் போற்றப்படுகின்றனர்..

சிவன் தவத்தில் இருக்கும் பொழுது அவரின் மனைவி பார்வதி காம தேவனை சிவன் மீது காதல்அம்பு விட செய்ய.. காமனும் அதைச் செய்து சிவன் தவத்தை கலைக்க.. அதில் கோபம் கொண்ட சிவன் கண்களைத் திறக்க தீப்பொறி பறந்து

காமனை சாம்பலாக்கி விடுகிறார்.. பிறகு காமனின் மனைவி ரதி சிவனிடம் கெஞ்ச.. ரதிக்கு மட்டுமே காமன் கண்ணுக்கு தெரியும் மாதிரி அவனை உருவாக்குகிறார்.. காமத்தை எரிக்கத்தான் நாடெங்கும் ஹோலி பண்டிகை கொண்டாடப்படுகிறது..

லாங் லாங் அகோ இந்திரலோகம் ரதி தன் மன்மதனுக்குகாக காத்துக் கொண்டிருக்க யாருக்கும் தெரியாத உருவில் இருந்த மன்மதன் ரதியோடு அந்த மரத்தடியை மஞ்சமாக்கிக் கொஞ்சிக் கொண்டிருக்க..

அப்பொழுது அந்த வழியாக வந்த ரதிதேவியின் பணிப்பெண் அம்பா

முள்ளில் சிக்கிய மாய மானை விடுவிக்கும் பொருட்டு இவர்கள் இடம் நோக்கி வர அவளுடைய சத்தத்தில் தங்களின் மோக நிலை கலைந்தார்கள்.. காமனுக்கு கோபம் வந்துவிட்டது உடனே அம்பாவிற்கு சாபம் விடுகிறார்..

"நீயும் என்னை போல உன் உற்றவனைத் தவிர வேறு யார் கண்ணுக்கும் தெரிய மாட்டாய்" என்க அம்பாவோ கதறியபடி

"ஐயோ சுவாமி அப்படி சொல்லாதீர்கள்.. நான் அந்த மாயமான் முள்ளில் சிக்கியதால் அதை காக்கும் பொருட்டு இங்கு வந்தேன்.. இல்லையென்றால் என் பேரில் சத்தியம்

செய்கிறேன்.. இங்கு வந்து உங்களுக்கு இடையூறு செய்திருக்க மாட்டேன்".. என்று அழ (நீர் புல் டைம் பிசியா இருந்தா அவ என்னவோய் செய்வா)

ரதி மன்மதனின் கைகளைப்பிடித்து கொஞ்சலாக "நாதா அவளுக்கு நீங்கள் கண்களுக்கு தெரிந்திருக்க மாட்டீர்கள் அல்லவா.. அவளும் பெண்ணல்லவா பாவம்தானே எனக்காக இறங்க கூடாதா" என்று காதலாக கண்களை சிமிட்ட

" என் கண்ணே நீ சொன்னால் என்ன வேண்டுமானாலும் செய்வேன்.. ஆனால் விட்ட சாபம் விட்டது தானே.. இனி அதை மாற்ற முடியாதே

நான் என்ன செய்வது" என்று காமன் தவிப்பாக கேட்க

"விட்ட சாபத்தில் ஏதாவது மாற்றம் செய்யலாம் தானே அந்த மாற்றம் இந்த காரிகைக்கு உதவும்தானே எனக்காக செய்யுங்களேன்" என்று சொல்ல

" சரி பெண்ணே என் ஆசை நாயகிக்காக உனக்காக ஒரு உதவியை செய்கிறேன்"..

"நீ பூலோகத்திற்கு செல்வாய்  உன் ஆடவன் கண்களுக்கு மட்டுமே தெரிவாய் .. யார் கண்ணுக்கு நீ தெரிகிறாயோ அவனே உன் கணவன் என்று அவனுடைய கரு உன் வயிற்றில் உருவாகிறதோ அன்று உன் உருவம் சாதாரண மானிட உருவமாய் மாறும்..

அவனோடு வாழ்க்கையை சுகமாய் வாழலாம் .. ஆனால் அது அவ்வளவு எளிதல்ல பெண்ணே இதற்காக பெரும் பாடுபட வேண்டும் அது உன் சாமர்த்தியம்தான்.. அதற்கு நான் எந்த உதவியும் செய்ய மாட்டேன்.. நீ மனித ஜென்மம் அடைந்த பிறகு மீண்டும் இந்த உலகத்திற்கு வரவே முடியாது.. உன்னுடைய இந்த ஞாபகங்கள் எல்லாம் மறந்தே போகும் சரியா" என்று கேட்க..

"சரி சுவாமி "என்று முழங்காலில் அவரைப் பணிந்து கொள்ள அந்த நிமிடமே அந்த காரிகையின் உருவம் காற்றில் மறைந்து போய் பூலோகத்திற்கு வந்தாள் அம்பா சாபமடைந்து

மாயமோகினியாக..

இந்திரலோகத்தில்
மன்மதனை சந்தோஷமாக
அணைத்துக்கொண்டாள்
ரதி..

" நாதா எனக்காக நீங்கள்
அந்தப் பெண்ணிற்கு உதவி
செய்ததற்கு மிகவும் நன்றி
"என்று அவன் நெஞ்சில் சாய

"உன் உதவியை
இப்படித்தான் செய்ய
வேண்டும் என்று இல்லை
கண்ணே எப்படி
வேண்டுமென்றாலும்
செய்யலாம் "என்று
குறிப்பால் உணர்த்த அவள்
மயக்கும் புன்னகையை
அவனுக்கு பரிசளித்தாள்..

அவளை தன் மீது சாய்த்துக்
கொண்டான்.. "நீ
நினைப்பது போல இது

ஒன்றும் மிக எளிமையான காரியம் அந்த மாயமோகினிக்கு கிடையாது.. அவன் கலியுகத்தில் வாழும் விசுவாமித்திரன் போன்றவன்.. பெண்களை பக்கத்தில் சேர்க்கவே மாட்டான்.. அவனை மயக்கி அவனோடு வாழ்வது என்பது மிகவும் சவாலான விஷயம் மாயமோகினிக்கு"..

" ஏன் நாதா அப்படியென்றால் ஏதாவது பெண்ணுக்கும் மயங்கும் ஆடவனை இவளுக்கு தேர்வு செய்திருக்கலாம்தானே எதற்காக அந்த மானுடனை.. நீங்கள் இவளுக்கு தேர்வு செய்தீர்கள் ஏற்கனவே இந்திர லோகத்தை விட்டு பூலோகத்தில் சென்று என்ன பாடு பட போகிறாளோ..

அதில் மீண்டும் வேதனையைக் கூட்ட ஏன் இப்படி ஒரு காரியத்தை செய்கிறீர்கள்"..

"எப்பொழுதுமே எளிதாக கிடைக்கும் ஒரு பொருளுக்கு மதிப்பு ஏது கண்ணே..  அது காதலோ பொருளோ எளிதாக கிடைத்து விட்டால் அதன்மீது நமக்கு அவ்வளவாக பிடிப்பு இருக்காது.. அதேபோல பாறையில் வரும் நீருற்று மிகுந்த மதிப்பு உள்ளது .. அவன் மனதில் தோன்றுகின்ற காதல் மிகவும் ஆழமாக இருக்கும்.. இவளை காலத்திற்கும் கண்கலங்காமல் பார்த்துக் கொள்வான். எனவேதான் அவனை மாயமோகினிக்கு நான் தேர்வு செய்தேன்"..

"ஓ !போனவுடன் அவனை கண்டு கொள்வாளா?"..

"ஹிஹி இல்லவே இல்லை அதற்கு பத்து வருடங்கள் ஆகலாம் அல்லது பத்து மாதங்கள் ஆகலாம் இல்லை பத்து யுகங்கள் கூட ஆகலாம் காத்திருப்போம்"

நாதா அப்படி என்றால் நீங்கள் அவளுக்கு உதவி செய்யவே முடியாதா

" உனக்காக ஒன்று செய்கிறேன் அவன்மீது மாயமோகினியை காம அம்புகளை தொடுக்க செய்கிறேன்"(அது போதாதா)..

"ஹா ஹா இந்த ஒன்று போதுமே அந்த விசுவாமித்திரரின் தவத்தையே கலைத்தவர்

ஆயிற்றே.. நீங்கள் இந்தக் கலியுகத்தில் வாழும் விசுவாமித்திரன் எம்மாத்திரம்.. நானும் அவர்கள் விளையாட்டை காண காத்திருக்கிறேன்" என்று அவர்கள் உலகத்திற்குள் சென்றனர்

பூலோகத்திற்கு வந்த அம்பா மாயமோகினி எல்லாவற்றையும் மிரட்சியோடு பார்த்தாள் .. அவள் பார்த்த இந்திரலோகம் தங்கத்தால் இழைத்தது வைரத்தால் மினுங்கியது.. ஆனால் இங்கோ புழுதியும் நிற்காமல் ஓடும் வண்டியும் , கசகசவென்று ஒரே சத்தம் பார்க்கவே பயங்கரமாக இருந்தது.. அவள் வந்து நின்றது சென்னை யார் கண்ணுக்கும் தெரியாமல்

இருந்தாலும் பூலோகத்திற்கு வந்ததும் அவளுக்கும் மனிதர்களைப் போன்றே வயிறு பசிக்க மற்ற எல்லா தேவைகளும் உண்டாகியது கண்ணில்பட்ட பிடித்த பொருட்களை எடுத்து சாப்பிட்டுக் கொண்டாள்.. இன்னொரு முக்கியமான விஷயம் என்று அவனைக் கண்டு கொண்டு அவனோடு வாழ ஆரம்பிக்கிறாளோ அன்றிலிருந்துதான் அவளுடைய வயது ஏற ஆரம்பிக்கும்.. அதுவரை அவளுக்கு இந்திர லோகத்தில் இருந்து வந்த அதே பத்தொன்பது வயது மட்டுமே .. அதற்குரிய இளமையிலேயே தானிருப்பாள்.. அவனோடு வாழ ஆரம்பித்து என்று குழந்தை வயிற்றில் உருவாகுகிறதோ அதன்

பின்பு மாயமோகினிக்கு இந்திரலோகத்திலிருந்து இங்கே வந்தது  அவனை காதலித்த நினைவுகளெல்லாம் அழிக்கப்பட்டுவிடும்.. சாதாரண மனித உருவம் கொண்ட பெண்ணாக மாறி விடுவாள்..

அதோ இதோ என்று இப்போது அவளுக்கு பூலோகம் வந்து 10 வருடங்கள் ஆகிவிட்டது.. இதுவரையும் யார் கண்களுக்கும் அவள் தெரிந்ததேயில்லை எல்லா இளம் ஆண்கள் முன்னாடியும் அவள் போய் நிற்பாள் யாருக்காவது தன்னை அடையாளம் தெரிகிறதா என்று ஆனால் அந்தோ பரிதாபம்..  அவள் யார் கண்களுக்கும்

இதுவரை தெரிந்ததில்லை..
ஓரளவுக்கு சென்னை
வாழ்க்கைக்கு பழகிக்
கொண்டாள் மாயமோகினி
சென்னையின் புறநகர்
பகுதியில் பல வருடங்களாக
பூட்டி கிடந்த வீட்டில் தான்
அவளுடைய வாசம்..

சென்னையின் நடுத்தர
மக்கள் வசிக்கும்
அயனாவரம் பகுதி ஒரு
வீட்டில்

" டேய் மதன் சொன்னா
கேளுடா அப்பா
திட்டுறதுக்காக இப்படி
கோச்சுக்கிட்டு வீட்டை
விட்டு போனா ஊர் உலகம்
நம்மள தப்பா பேசும்டா
அப்பா உன்னோட
நல்லதுக்கு தானே
சொல்றாரு தயவுசெய்து
அப்பா சொல்றதை

கேளுடா'' என்று தன்
மகனோடு
போராடிக்கொண்டிருக்க..

அவனோ சோபாவிலிருந்து
தன் துணிகளை அடுக்கி
வைத்துக்
கொண்டிருந்தான்..

'' சித்ரா அவன்கிட்ட கேளு
இதுக்கு முடிவு சொல்வானா
மாட்டானா இவனால
என்னோட பொண்ணு
வாழ்க்கையும்
பாதிக்கப்படுது மைனருக்கு
அப்படி எந்த பொண்ணு
தான் கிடைப்பாளாம்..
ஏதாவது இந்திரலோகத்தில்
இருந்து பொத்துக்கிட்டு
வந்து வீட்டுக்குள்ள
விழுந்தாதான் உண்டு'' ..

''நான் ஒன்னும்
இந்திரலோகத்துப்
பொண்ணு வேணும்னு

சொல்லல எனக்கு கல்யாணமே வேண்டாம்னுதான் சொல்றேன்.. தங்கச்சிக்கு கல்யாணம் பண்ணி வைக்கணும்னா பண்ணி வையுங்க உங்கள நான் எதுவுமே சொல்லல.. என்ன எதுக்கு டார்ச்சர் பண்றீங்க எனக்கு கல்யாணமே வேண்டாம்" என்று அவன் வெடுக்கென்று சொல்ல

"ஏன் மைனர் கல்யாணம் முடிக்காமலேயே அப்படியே சன்னியாசி வாழ்க்கை வாழ போறாரா? இல்லை ஏதாவது சாமியார் மடம் ஆரம்பிக்க போறாரா?"

"அது என்னோட இஷ்டம் சாமியார்மடம் ஆரம்பிக்கிறேன்.. இல்ல சம்சார மடம்

ஆரம்பிக்கிறேன்
உங்களுக்கு என்ன வந்துச்சு
உங்க வேலைய பாத்துட்டு
போங்க"

"நீ  என்னைக்கு வேலைக்கு
போக ஆரம்பிச்சியோ
அன்னையிலிருந்து நீயும்
இப்படி தாண்டா ஏட்டிக்கி
போட்டி என் கிட்ட
பேசிக்கிட்டு இருக்கிற"
என்று அவர் எகிற..

" நீங்களும் எனக்கு
பிடிக்காதயே தேடி தேடி
செஞ்சா  நானும்
இப்படித்தான் நிற்பேன்" ..

"சரிடா உனக்காக இறங்கி
வரேன் தயவு செய்து
உன்னுடைய தங்கச்சிக்காக
அந்த பொண்ண கல்யாணம்
கட்டிக்கோ"..

"அவனுக்கு நம்ம தங்கச்சிய

புடிச்சிருந்தா கட்டிக்க வேண்டியதுதானே எதுக்காக அவன் தங்கச்சிய என்ன கட்டிக்க சொல்லி கம்பெல் பண்றான்.. இது என்ன கொடுக்கல் வாங்கல் பிசினஸா.. கல்யாணம்.. என் தங்கச்சிக்கு ஆயிரம் மாப்பிள்ளை பார்த்து கட்டி வைக்கிறேன்.. இந்த சம்பந்தம் வேண்டாம் இதைத்தான் நான் முதலிலிருந்தே சொல்லிக்கிட்டு இருக்கேன் நீங்க தான் கேட்க மாட்டேங்கறீங்க"..

"டேய் அவுங்களுக்கு உன்ன ரொம்ப பிடிச்சிருக்குடா"..

"ஏன் இத பத்து வருஷத்துக்கு முன்னாடி சொல்ல வேண்டியதுதானே அப்போ நான் வேலைவெட்டி

இல்லாதவன் இப்போ லட்ச ரூபாய் சம்பாதிக்கிறேன்.. நீங்களும் உங்க பையனை விற்க பார்க்கிறிங்க.. அதுக்கு ஆள் நானில்லை.. இனி என்னை தொந்தரவு பண்ணாதீங்க.. என் தங்கச்சிக்கு செய்ய வேண்டிய கடமையை சிறப்பா நான் செய்வேன்"..

சித்ரா "எங்கடா போற"..

"எங்க ஆபீஸ் பக்கம் ஒரு வீடு காலியா இருக்கு அங்கதான் போறேன்..கொஞ்சநாள் அங்க இருக்கேன் பிடிச்சா வாங்கலாம்னு இருக்கேன்" என்றவன் தன் பேக்கை எடுத்து கொண்டு வெளியே வந்தான்..

அவன் மதன் ..

ஐடி நிறுவனத்தில் வேலை பார்க்கிறான்.. இவன் பதவியை வைத்து நல்ல வரதட்சணையோடு பெண் எடுத்து தன் மகளை ஓசியாக அந்த வீட்டிற்கு அனுப்ப வேண்டுமென்று இவன் தந்தை சேகர் நினைக்க இவனோ ஓடி வந்துவிட்டான்..

"டேய் சுரேஷ் நான் மதன்டா"..

"சாதா மதனா மன்மதனா"..

"ஹாங் நொந்த மதன்" ..

என்ன மச்சி கோவமா இருக்கியா ?"
"

"கொலை காண்டுல இருக்கேன்.. வீட்டை விட்டு வெளிய வந்துட்டேன்.. நம்ம ஆபீஸ் பக்கம் ஒரு வீடு

இருக்குன்னு சொன்னீயே
பேசி முடிக்கலாம் வா"..

"ஏன்டா உனக்கு
கொலைவெறி அங்க ஏதோ
பேய் இருக்குன்னு
சொல்றாங்கடா.. நிதாமா
வேறு வீடு பார்க்கலாம்"..

"அதுக்கெல்லாம்
நேரமில்லை.. பேய்தானே
அது ஒரு பக்கத்தில
இருக்கட்டும் நான் ஒரு
பக்கத்துல இருக்கேன்
பிடிச்சா ரூம் மேட்
ஆகிக்கிறோம் மூடிட்டு
சொன்னதைச் செய்"..

"ஏது பேய்க்கூட ரூம் மேட்டா..
நீ விட்டா  லிவிங் டுகதர்ல
வாழ்வப் போல"..

"பிடிச்சா வாழ்வேன்டா
இங்க உள்ள நடிப்பு
பேர்வழிகளோட பேய்

பெட்டர்"..

"நீ ஏதோ முடிவோட தான் சுத்திற.. எனக்கென்ன. வெயிட் பண்ணு ஓனர்கிட்ட சாவி வாங்கிட்டு வர்றேன்" என்று மதனும் சுரேஷும் மாய மோகினி இருக்கும் வீடு நோக்கி பயணம் செய்தனர்..

மோகினி சலிப்புடன் சுற்றி வந்தாள் .  மெரீனா பீச்சில்  .. படகுக்கு மறைவாக ஒரு காதல் ஜோடி உதட்டோடு உதடு சேர்த்து முத்தம் கொடுக்க..

"ம்ம் இந்த  காதல் ஜோடிகளுக்கு  தனியிடம் கிடைத்துவிட்டாள் போதும் உதட்டை சப்ப ஆரம்பிச்சி சிவப்பாக்கிடுறான்க.. அப்படி என்னதான் இந்த எச்சில்ல இருக்குமோ.. நாதா

எங்கே இருக்கிறீர்கள்
எனக்கும் இதே போல
உங்கள் இதழை கடிக்க
வேண்டும் .. இன்னும்
எவ்வளவு நாள்
காத்திருக்கணும் சலிப்பா
இருக்குது .. பிராண நாதா
சீக்கிரம் வருவாயா
எனக்கும் இது போல்
தருவாயா" என்று ஏக்க
பெருமூச்சு விட்டவள்..

வீட்டிற்குள் கதவு ஊடாக
உள்ளே நுழைந்து மாயா
உள்வர ஆள் நடமாட்டம்
வீட்டிலிருக்க" எந்த
கம்னாட்டி உள்ள வந்தது
பேய் மாதிரி சீன் போட்டு
அல்லுவிட வைக்க
வேண்டியதுதான்.. எத்தனை
தடவை விரட்டிவிட்டாலும்
மறுபடி மறுபடி
வந்துடுறான்க".. என்று
புலம்பி கொண்டு ஒவ்வொரு

அறையாக ஆட்களைத்
தேட..

குளித்துவிட்டு முகத்தை
துடைத்து விட்டு வந்த மதன்
இவளைப் பார்த்துவிட்டு..

"யார் நீ ? எப்படி உள்ள வந்த
?"என்று கேட்க..

மாயாவுக்கு அவனுக்கு தன்
உருவம் தெரிகிறது
என்றதும் சந்தோஷம் தாங்க
முடியவில்லை..

"பிராணநாதா என்னை
தெரிகிறதா?"

"என்னது பிராணநாதனா?
யாருடி நீ? யாரு பிராணை
வாங்கடி வந்திருக்க?"

"நாதா என்னை தெரிகிறதா
என்று கேட்டேன்"..

"ஏன் தெரியலை நல்லாவே

தெரியுது ..பூட்ன
வீட்டுக்குள்ள எப்படி வந்த
திருட வந்தியாடி "

" இல்லை நாதா நான்
இந்திரலோகத்தைச்
சேர்ந்தவள்.. உங்கள்
பார்வைக்காகதான்
இத்தனை நாள்
தவமிருந்தேன்".என்று
கண்கள் படபடக்க கூற

"சரிதான் மெண்டலா நீ?"

"நான் படம் எடுக்குறேன்னு
எவனாவது சொன்னானா
நான் டைரக்டர் இல்லை ..
நல்ல டைரக்டர் பாரு நடிக்க
வாய்ப்பு தருவாங்க
இடத்தை காலி பண்ணு
எனக்கு தூக்கம் வருது"..

"ஓ !தூக்கம் வருதா நான்
என்னையே தர
காத்திருக்கிறேன் வேலை

முடிந்ததும் சேர்ந்து தூங்கலாம்" என்று கண்ணடிக்க..

"என்ன வேலை உனக்கும் எனக்கும் "என்று புரியாமல் கேட்க..

"அதுதான் பிள்ளை பிறக்க செய்யும் மிகப் பெரிய வேலை"..

"எது உனக்கும் எனக்கும் பிள்ளையா? "

"ம்ம் எஸ் பேபி.. யூ நோ உங்கள மாதிரி நிறத்தில என்ன மாதிரி அழகுல பெத்துக்கலாம்"..

"யார்டி நீ பார்த்து பத்து நிமிஷம் ஆகலை பிள்ளை பெக்கிறது வர சொல்ற"..

"மாம்ஸ் உங்களுக்காகதான் பத்து வருஷமா லோ

லோன்னு அலையிறேன்..
இனி பேச்சுக்கு இடமில்லை
ஒன்லி ஆக்சன் அது நீங்க
பண்ணினாலும் சரிதான் ..
நான் பண்ண
வேண்டுமென்றாலும்
சரிதான்.. இந்த உலகத்துக்கு
வந்ததிலிருந்து எனக்கும்
இங்கே உள்ள பெண்கள்
போல உல்லாசமாக சுற்றும்
ஆசை வந்துவிட்டது.. அதற்கு
உருவம் தேவை நீதான்
எனக்கு கிடைத்த அடிமை
என்பது எனக்கு கிளியர்
ஆகியிடிச்சி அதனால
எங்கிட்டயிருந்து தப்பிக்க
முடியாது"..

அவனோ இவள் என்ன
உளறுகிறாள் பார்க்க அழகு
சிலை போலிருக்கிறாள்
பைத்தியமா நம்ப
முடியலையே என்று
யோசிக்க அதற்குள்

உள் அறையிலிருந்த வந்த சுரேஷ்..

"யாருகிட்ட மச்சான் பேசுற?"..

"இதோ இவக்கிட்ட" என்று மதன் மாயா நோக்கி கைக்காட்ட..

அங்கே வெறும் சேர்தான் இருந்தது..

"சேர்கிட்ட என்னத்த பேசுற?"..

"உளறாதடா இதோ சேர் பக்கத்தில ஒரு பிகர் நிக்குதே அதுகிட்டதான் பேசுறேன்"..

"என்னது பிகரா எங்க எங்க?"என்று தேட

" அலையாதடா இந்தா நிக்கிறா என்கூட பிள்ளை

பெக்கணுமாம்"

" என்னடா ஜாம் வச்சி பிரெட் திக்கணுமாங்கிற மாதிரி சொல்ற.. அது பிள்ளைடா .. அதுசரி  எனக்கு ஒரு பிகரும் தெரியலையே"..

"எனக்கு நல்லா தெரியுதே ஏய் எதுக்குடி  உதட்டை கடிச்சி கால் கட்டை விரலால கிணறு தோண்டுற"... என்றான் அவனையே ஒரு மார்கமாக பார்த்து கொண்டிருந்த மாயாவைப் பார்த்து..

அவளோ "இப்படி நச்சுன்னு உடம்பு வச்சிருக்கிங்களே உங்க பிடியை தாங்குவேனா மாம்ஸ் இங்கு ஒருதடம் அழுத்தி பிடிங்களேன் என்று தன் மாராப்பை விலக்கி காட்ட..

" ஏய் மூடுடி மூடுடி  அவன் இருக்கான்"..

"அவர் இல்லைன்னா உங்களுக்கு சரியா மாம்ஸ் அவர் கண்களுக்கு நான் தெரிய மாட்டேன் ஓன்லி பார் யூ "என்று மீண்டும் ஏக்க பெருமூச்சி விட்டு அவனருகில் வர.. மதன் அவள் முன்னேற முன்னேற பின்னோக்கி நடக்க..

சுரேஷூக்கு  தலை சுற்றியது இவன் யாரும் இல்லாமல் யாரிடம் பேசி கொண்டிருக்கிறான் என நினைத்து

"ஏன்டா  மச்சி குடிச்சிருக்கியா .. மட்டமான சரக்கை குடிச்சா இப்படிதான் உளற தோணும்"..

"நான் மாசத்தில ஒருநாள்தான்டா நாயே குடிப்பேன்னு உனக்கு தெரியும்ல லூசுமாதிரி நீ பேசாத .. இவதான் ஏதோ உளர்றா என் கண்ணுக்கு மட்டும் தெரிவாளாம்.. அப்படியே பிள்ளை கொடுங்கிறா.. நான் என்ன பிள்ளையை அமேசான்ல வாங்கியா கொடுக்க முடியும் .. நானே அந்த பலான ஆசை வர மாட்டைக்குன்னுதான் கல்யாணமே வேண்டான்னு சுத்துறேன்.. இவ வேற கடுப்ப கிளப்பிக்கிட்டு "..என்று தன் நிலமையை நொந்து கொள்ள..(அவனா நீ)

"மாம்ஸ் அதான் நான் சொல்றேன் எங்கூட வாங்க பலான ஆசையில்லை பல

ஆசையும் வரும் கூடவே குழந்தையும் வரும் ஆடி ஆப்பர் போன்று உங்களுக்கு மஜா எனக்கு குழந்தை எப்படி என் திட்டம்.. வேண்டுமென்றால் உங்கள் நண்பரிடம் கேளுங்கள் என் முடிவு சரி என்பார்.. இவர் உங்கள் நண்பர்தானே? "

"ஏய் நீ வந்ததிலயிருந்து ராங்காவே பேசுற ஒரு கன்னி பையனை உசுப்பி விடப் பார்க்கிற இடத்தை காலி பண்ணு"

"நீங்க ராங்கா எங்கிட்ட பண்ணினா நான் ஏன் உங்ககிட்ட ராங்கா நடக்க போறேன்.. வாங்க" என்று கைகளை விரிக்க..

"சீ போடி அங்க" ..

சுரேஷ் கண்களுக்கு ஒன்னும்

தெரியவில்லை "ஒருவேளை பேயாக இருக்குமோ என்று ஏற்கனவே சொன்னாங்களே கேட்டிருக்கணும் வாலிண்டியரா வந்து மாட்டிகிட்டோம் போல" என நினைத்தவன் பிடித்தான் ஓட்டம் ..

"மச்சான் வீட்ல பேய் இருக்குடா தப்பிச்சு ஓடிரு நாளைக்கி நீ உயிரோட இருந்தா மீட் பண்ணலாம்" என்று ஓட..

" அவனுக்கு தெரியாமல் எனக்கு மட்டும் தெரிகிறாள் ஒருவேளை உண்மையாக பேய்தானா"...என்று அவளை மிரண்டு பார்க்க..

"என்ன அப்படி பார்க்குற மாம்ஸ் ஆசை வந்திடுச்சா என்மேல. வா வா அதுக்காதான் வெயிட்டிங்

எனக்கு சாபத்திலிந்து விமோச்சனம் தா "என்று அவனை நோக்கி பறந்து வர..

அவள் பறவை போல பறப்பதைப் பார்த்தவன் மயங்கி சரிந்தான்..

## 2 மாய மோகினி

மதன் மயங்கி விழுந்தவுடன் மாயா வேகமாக அவனிடம் வந்து அவனை சுற்றிப் பார்த்தவள்..

"கிழிஞ்சி போச்சி நம்ம ஆளு இவ்வளவு வீக்கா இருக்காரு சோ ஷேட்.. இதுக்கு காதல் வர வச்சி பிள்ளை பெக்குறது ரொம்ப கஷ்டம் போலையே இவன் எப்ப எழுந்து காதல் வந்து, கட்டில் போயி, குழந்தை வந்து, ஐயோ! காமதேவா இப்பவே

கண்ண கட்டுதே மேலிருந்து பார்த்து கொண்டுதானே இருப்பிர் நீர் மட்டும் ரதியைவிடாமல் லவ் டார்ச்சர் செய்கிறிர் .. எனக்கும் இந்த டுயுப் லைட்டில் ஒளி வர உதவி செய்யுங்கள்.. இவர் குண்டு பல்ப்பாக இருக்கிறாரே.. இப்படி இவரிடம் கோர்த்துவிட்டு வேடிக்கை பார்க்கிறது உங்களுக்கு நல்லதா.. ஏதாவது செய்து எங்களை சேர்த்து வையுங்கள்" என்று புலம்பி கொண்டே  சென்று நீரை எடுத்து வந்து கொஞ்சமாக அவன் முகத்தில் தெளித்து தன் மடியில் படுக்க வைத்து தான் அணிந்திருந்த மாயலோக துணியால் அவன் முகத்தில் துடைக்க.. அதிலிருந்த ஜரிகைகள் குத்தி அவன் முகம் காந்த

வைக்க எழும்பி
உட்கார்ந்தவன்

அவள் கையை தட்டிவிட்டு
பத்தடி கேப் விட்டு  அமர்ந்து
கொண்டவன்

"அந்த துணிய துவைச்சி
எத்தனை நாள்டி ஆகுது
நாத்தம் குடலை பிடுங்கியது
தள்ளி போடி" என்று
விரட்டியவன் அவளை
மிரண்டு போய் பார்த்தான்..

"அதெல்லாம் போன
தீபாவளிக்கு துவைச்சேன்
இனி அடுத்த தீபாவளிக்கு
தான் துவைப்பேன் ஓயாமல்
துவைச்சா அதில உள்ள
பட்டு துணி கரைஞ்சிடும்"..

"என்னது ஒரு வருஷத்துக்கு
ஒரு தடவைதான்
துவைப்பியா அதான்  இந்த

நாத்தம் நாறுது கொஞ்சம் சென்டாவது அடிக்கக் கூடாதா மனுஷன் பக்கத்தில் வர முடியல"..

"இவ்வளவு நாள் யார் கண்ணுக்கும் தெரியாததால் அதை பற்றியெல்லாம் யோசிக்கல.. அதான் இப்போ நீங்க வந்துட்டிங்களே .. உங்களுக்கு பிடித்த மாதிரி ஜவ்வாதில் குளித்து சந்தனத்தில் முதுகு தேய்க்கிறேன் போதுமா"..

"நீ எதில் வேண்டுமானாலும் முதுகு தேயி முதல்ல எடத்த காலி பண்ணு"..

"முடியாது"

"நீ போகலைன்னா நான் இடத்தை காலி பண்றேன்" என்று தன் மூட்டை முடிச்சை

கட்டிக்கொண்டு வெளியேற பார்க்க.. விடுவாளா மாயமோகினி

"இங்க பாரு மாம்ஸ் நீ நினைக்கிற மாதிரி நான் பேயோ பூதமோ கிடையாது .. சாதாரண மனுஷிதான்.. நான் இந்திர லோகத்திலிருந்து வந்தவ.. இதுதான் உண்மை உன் மேல சத்தியம்"..அவன் புரியாமல் முழிக்க

"அதான் சொல்லுவீங்களே அதர் ஸ்பேஸ்"..

" அப்போ நீ  ஏலியனா?"

"உனக்கு தெளிவு பெற வேண்டுமென்றால் அப்படியும் வைத்துக்கொள்ளலாம்"..

"நீ பேய் இல்லன்னா உன் கால் காட்டு நம்புறேன்"..

சரி என்று தலையாட்டியவள் தன் இரண்டு பஞ்சுபோன்ற பாதங்களை அவனுக்கு காட்ட ..

"காலிருக்கு ஓகே .. எங்க மூச்சி விடு" என்று அவள் பக்கத்தில் போக.. அவள் அவன் முகத்தில் தன் மூச்சுவிட..

"அப்பாடி அதுவும் இருக்கு... ஆனா ஏன் என் கண்ணுக்கு மட்டும் நீ தெரியிற .. சுரேஷ் கண்ணுக்கு தெரியல "என்று அடுத்த கேள்வி கேட்க

"அதுவா வீணா போன காமனுக்கு நேரங்கெட்ட நேரத்தில மூட் வந்து ரதி மேல பாய.. பாழாப்போன மான் போய் முள்ளில் மாட்டி.. பெரிய இரக்க குணமுள்ளவன்னு நான் அதப் போயி எடுக்க..

முக்கியமான நேரத்தில
காமன டிஸ்டர்ப் பண்ணி
அவருக்கு கோவம் வந்து
போ அக்கடான்னு விரட்ட
இப்படி கிறுக்கி மாதிரி
உங்கிட்ட
புலம்பிகிட்டிருக்கேன்" ..

மெதுவாக அவன் பக்கத்தில்
போய் அமர .. அவனுக்கு
இன்னுமே அவளை நம்ப
முடியவில்லை எனவே
நாலடி தள்ளி உட்கார..

" எதுவாயிருந்தாலும்
தள்ளியிருந்து பேசு எனக்கு
நல்லாக் காது கேட்கும் ..
உனக்கு இப்ப என்ன
செய்யணும்"

"மாம்ஸ் தள்ளியிருந்தது
பேசினா என்னோட சாபம்
தீராது.. எனக்கு உன் மூலமா
பிள்ளை வந்தே ஆகணும்..

அதனால கொஞ்சம் முயற்சி பண்ணேன் காசா பணமா ஒரே ஒரு பிள்ளை தானே கேட்கிறேன் இதை இன்னொருத்தனாகயிருந்தா நான் சொன்ன நேரத்துக்கு என் மேல பாஞ்சி பத்தே நாளில் புள்ள வந்துருக்கோம்.. இப்படி மங்கூஸ் மண்டையா இருக்கியே".

தன் முகத்தை கோபமாக வைத்துக் கொண்டவன் "இங்க பாரு எத வேணும்னாலும் பேசு அத பத்தி மட்டும் பேசாத "என்று கோபப்பட

" அப்படி என்னதான் உனக்கு பிரச்சனை சொல்லு கண்டிப்பா யாருகிட்டையும் சொல்ல மாட்டேன் பலூனில் காற்றுப் போயிடுச்சா..

இல்ல பலூன் வேலை செய்யாதா" என்று கண்ணடிக்க ..

"என்னடி நீ இப்படி அசிங்கமா பேசுற இந்திர லோகத்தில் இருந்து வந்திருக்கேன்னு சொல்ற இங்கிலீஷ் பேசுற, நம்ம நாட்டுல நடக்கிற எல்லாத்தையும் சொல்ற... அசிங்கமாவும் பேசுற எனக்கு இன்னும் உன்னை நம்ப முடியல மோகினியெல்லாம் இப்படி பேசுவாங்களா? "

"எல்லார்கிட்டயும் பேசினா தான் தப்பு உன்கிட்ட பேசலைன்னாதான் தப்பு.. சரி உன்னோட பிரச்சனையை சொல்லு என்னால முடிஞ்சா தீர்த்து வைக்கிறேன்"..

சிறிது நேரம் யோசித்தவன்" சரி ஒருவேளை இவள் ஏதாவது மாயமந்திரம் செய்து மாற்றிவிட்டால் தனக்கு உணர்வுகள் வந்துவிட்டால் பிறகு திருமணம் செய்து கொள்ளலாம்" என்ற நம்பிக்கையில் தன் கதையை சொல்ல சொல்ல ஆரம்பித்தான்..

"எனக்கு பெண்களிடம் எப்படி சொல்றது பலான ஆசையே வரமாட்டேங்குது.. ஏதாவது பெண்ணை கல்யாணம் கட்டிகிட்டா அவள திருப்திபடுத்த முடியாதுன்னு பயமா இருந்துச்சு..கல்யாணம் கட்டில்னு சொன்னாவே பயமா இருக்கு காமவுணர்வு வராம எப்படி திருமணம் செய்ய"

" ஏன் உனக்கு அப்படி ஆசையே வரமாட்டேங்குது "

"அதுக்கும் காரணம் இருக்கு நான் படித்தது எல்லாம் பாய்ஸ் ஸ்கூல், வீட்டிலேயும் ஒரு தங்கச்சி இருக்கா அவ மேல ரொம்ப அன்பாயிருப்பேன் அதனால எந்த பெண்களை பார்த்தாலும் எனக்கு அக்காவாக இல்லை தங்கையாகவும் தெரியுது.. யாரையுமே தப்பான கண்ணோட்டத்தில் என்னால பார்க்க முடியல .. சின்ன இச்சைக் கூட என் மனசுல வரமாட்டேங்குது சலனம் வந்தாதானே காதல் வரும்.." என்று பாவமாக சொல்ல..

" ஆஹா இவன் சரியான மங்குனி அமைச்சராக

அல்லவா இருக்கிறான்.
யோவ் காமதேவா உனக்கு நான் என்னய்யா கொடுமை செய்தேன்.. ஒரு ரொமான்ஸ் சீனில் கட்டையை போட்டது தவறா அதற்காக இப்படி ஒரு கொடுமையை எனக்கு செய்ய வேண்டுமா. இவன் குண்டு பல்புகள் பியூஸ் போயுள்ளது.. நான் என்ன செய்யட்டும் இப்படி வம்பில் மாட்டி விட்டுவிட்டாயே"..

"உன் கப்பல் தரைத்தட்டி நடுக்கடலில் நின்றாலாவது பின்னாலிருந்து தள்ளிவிடலாம் .. ஆனால் உனக்கு கப்பல் இஞ்சின் வேலையே செய்யவில்லையென்றால் அது மிகவும் கஷ்டம் தான் ஒரு உதவி செய்கிறேன்.. நீ என் கூடவே இரு இதுவரை நீ பெண்களிடம் பழகியிருக்க

மாட்டாய் அதனால் உனக்கு அந்த ஆசைகள் வந்திருக்காது.. ஒரே வீட்டில் இருவரும் சேர்ந்திருந்தால்.. ஒருவேளை உனக்கு சலனம் வந்தாலும் வரலாம்.. அதற்கான பயிற்சிகளை உனக்கு தந்து உனக்கு ஆசை வர வைக்கிறேன்.. அப்படி ஆசை வந்து நீ என்மேல் மோகம் கொண்டு அதற்கு சம்மதித்தால் நாம் மகிழ்ச்சியாக இருப்போம் .. இதில் எனக்கு நான் கேட்க பிள்ளைவரம் கிடைத்துவிடும் உருவம் வந்துவிடும்.. உனக்கும் உன்னுடைய உணர்வுகள் வேலை செய்கிறதா இல்லையா என்பது தெரிந்துவிடும் .. அதன்பிறகு இன்னொரு பெண்ணை மணப்பதற்கு உனக்கு தயக்கம் இருக்காது என்ன

நான் சொல்வது இதற்கு ஒத்துக் கொள்கிறாயா "என்று ஆவலாக அவன் முகம் பார்க்க

"நீ சொல்றதெல்லாம் சரிதான் ஒருவேளை உன் மேல ஆசை வந்து தப்பு பண்ணிட்டு அதுக்கு பிறகு இன்னொரு பெண்ணை கல்யாணம் கட்டிகிட்டா அது தப்பு தானே . அதனால அது சரி வராது ஒரு துரோகத்துக்கு  நான் ஆளாக மாட்டேன்"..

"எங்கே போனாலும் இப்படி தடா போட்டா நான் என்ன செய்றது..  இதில் என்ன தவறு இருக்குது.. பெண்ணாகிய நானே மேட்டருக்கு ஓகேன்றேன் நீயும் நானும் செய்றதை நீ ஏன் வெளியே போய்

சொல்ல போற..  அப்படியே
கமுக்கமாக இருந்திட
வேண்டியதுதானே
இதெல்லாம் ஒரு
ஆம்பளைக்கு சொல்லிக்
கொடுக்க வேண்டுமா..
எப்படித்தான் இப்படி
நெடுமாறன் மாதிரி
வளர்ந்தியோ தெரியல..ஆள்
வளர்ந்த அளவிற்கு உன்
மூளை கொஞ்சம் கூட
வளரல''..

''இங்க பாரு நான் அந்த
விஷயத்தில் மட்டும் தான்
வீக் மற்றபடி நான் ரொம்ப
ஸ்ட்ராங் சும்மா என்னை
கிண்டல் அடிக்கிற
வேலையெல்லாம்
வச்சிக்காத அடிச்சி தொங்க
போட்டுருவேன்''  ..

''எப்படி இப்படி தொங்க

போடுவியோ" என்று சட்டென தன் விரலை சொடுக்கி அவனை நோக்கி நீட்ட .. மதன் தலைகீழாக ஃபேன் பக்கத்தில் இன்னொரு ஃபேனாக தொங்கினான்

"அய்யோ அய்யோ இறக்கி விடுடி.. எங்க அப்பன் தொல்ல தாங்கலன்னு இங்க வந்தா.. எங்க அப்பனுக்கு மேல பெரிய பேயா இருப்ப போல.. உலகமே தலைகீழாக சுத்துடி இறக்கிவிட்டு தொலை நீ மோகினிதான்னு ஒத்துக்கிறேன்.. நீ சொல்வதையெல்லாம் செய்றேன்.. இறக்கி விடுடி.. கிட்னி வாய் வழியாக வெளியே வரப் போகுது.. இப்பெல்லாம் வெறும் காய்ச்சலுக்கு

ஆஸ்பத்திரிக்கு போனாலே பத்தாயிரம் ரூபாய் இல்லாமல் போக முடியாது.. ஏதாவது ஏடாகூடமா இடம் மாறி போனா செலவழிக்க முடியாதுடி " என்றதும் போனால் போகட்டும் என்று அவனை இறக்கிவிட..

உட்கார்ந்து பெருமூச்சுவிட்டான் மதன் "ரெண்டு நிமிஷத்துல என்ன கொலை பண்ண பார்த்தியே போடி வெளியே .. இல்ல என் கையாலேயே உன்னை கொன்னு போட்டுருவேன்.. உன்ன மதிச்சி பேசினா என்ன கல்லறைக்கு அனுப்பிருவ போல அம்மா தாயே என் கஷ்டத்த நான் பார்த்துக்கிறேன் இடத்தை காலி பண்ணு " என்று மூச்சு வாங்க..

"ஹாஹா இடத்தை காலி பண்ணுவதா.. எனக்கு உருவம் வராமல் இடத்தை காலி செய்ய மாட்டேன் நீ என்னை அனுப்ப நினச்ச இப்போ தொங்குனியே அதே மாதிரி தொங்க வேண்டியதுதான்"..

"என்ன மிரட்டுறியா?"

"அப்படியும் வச்சிக்கலாம் .. யோசிச்சு பாரு உனக்கும் ஏதோ ஒருவகையில் நான் தேவை எனக்கும் நீ தேவை ஏன் இரண்டு பேரும் சண்டை போட்டு முறுக்கிக்கிட்டு நிற்கணும் .. சமாதானமாப் போனா உனக்கும் நல்லது எனக்கும் நல்லது இப்படி வீண் பிடிவாதம் பிடிச்சி என்ன கோபப்படுத்தாத"..

"என்ன என்னை மிரட்டி

உனக்கு அடிபணிய வைக்கிறியா அதெல்லாம் முடியாது நான் எங்க வீட்டுக்கு இப்பவே போறேன்" என்று அவன் தன் வீட்டிற்கு கிளம்ப..

"அங்கு போனா மட்டும் என்னால வர முடியாதுன்னு நினைக்கிறியா உன்னோட கண்ணைத் தவிர வேறு யார் கண்ணுக்கும் தெரிய மாட்டேன்.. ரொம்ப எளிதா எல்லா இடத்துக்குள்ளேயும் நான் நுழைஞ்சிடுவேன்.. பிறகு உனக்கு தான் கஷ்டம் நீ காட்டுக்கு போனாலும் வீட்டுக்கு போனாலும் நீ போகும் இடமெல்லாம் நானும் வருவேன்" என்று சிரிக்க

" சிரிக்காதடி எரிச்சல் மயிரா வருது.. எதுக்குடி

இப்போ இங்கயிருந்து உயிரை எடுக்குற.. எனக்கு பயிற்சியும் வேண்டாம் ஒன்னும் வேண்டாம் நீ போ"..

"சரி சரி கோபப்படாத ஒரு பத்து நாள்  டைம் கொடு ஒரு நல்ல வீடு தேடி போயிடுறேன் அதுவரைக்கும் நான் இந்த வீட்டில் இருக்கேன்.. அந்த பத்து நாளும்  உனக்கு நான் பயிற்சி கொடுக்கிறேன்.. உனக்கு அது பிடிச்சிருந்தா உன் கூடவே இருக்கேன் சரியா" என்றாள்

"சரி இருந்து தொல" என்று தன் அறைக்குள் சென்றவன் கதவை பூட்டிக்கொண்டு ஆடையை மாற்ற ஆரம்பிக்க.. மாயா கதவு வழியாக உள்ளே செல்ல அப்பொழுதுதான் பேண்டை

கழற்றி கொண்டிருந்தவன் இவளைக் கண்டதும் பட்டென ஒரு போர்வையை எடுத்து மறைக்க

"இவ்வளவு கூச்சமிருந்தா நீ கடைசிவரைக்கும் எதையும் சாதிக்க மாட்ட..  இனி எனக்கு முன்னாடி இப்படி கூச்சபடாதே அதுதான் உனக்கு நான் சொல்லிக் கொடுக்கப் போற முதல் பாடம்" என்று வந்து பெட்டில் அமர்ந்து கொண்டு மாற்று என்பது போல் கண்களை காட்ட அவன் நெளிந்துகொண்டே மாற்ற ஆரம்பித்தான்..

பயிற்சியில் முயற்சி செய்து தேர்ச்சி அடைவானா மதன்?

மாய மோகினி 3

அடுத்த நாளிலிருந்து

மதனுக்கு பயிற்சி காலம்
தொடங்கியதோ
இல்லையோ சோதனை
காலம் தொடங்கியது..
இவ்வளவு நாட்களும் மாயா
இந்திரலோகத்து
பட்டுத்துணியில்
மூடிகொண்டு அலைந்தவள்
மதனிடம் தங்க ஆரம்பித்த
பிறகு டோட்டலாக மயக்கும்
மோகினியாய் சிலிவ்லஸ்
டாப் கீழே கொஞ்சமாக
தொடை தெரிய ஷாட்ஸ்
போட்டு அவனுக்கு முன்பு
அங்கும் இங்கும் அலைய..
மதனுக்கு உள்ளுக்குள் ஏதோ
செய்தது சென்னையில்
இதையெல்லாம் மற்ற
பெண்களிடம் பார்த்து
பழகியவன்தான் ஆனால்
இவளிடம் ஏதோ ஒன்று
அவனை சத்தமில்லாமல்
அசைத்தது..

"மாயா எதுக்கு இப்படி டிரெஸ்  பண்ற .. முதல்ல இதெல்லாம் எங்க எடுத்து யாரு காசு தந்தா"..

"கடையிலதான்..  காசு என் புருஷன் காசு"..

"புருஷன் காசா? உனக்கு ஏது புருஷன்?.. யாரு அந்த இளிச்ச வாயேன்?"..

"கண்ணாடி போய் பாரு"..

"ஏது கண்ணாடி பார்க்கணுமா? அப்ப என்னதான் சொல்றியா".. என்று படபடவென்று தன் பர்ஸை திறந்து பார்க்க..நாமம் போட்டு வைத்திருந்தாள் அப்படியே நாளை பார்லர் போக ஒரு பத்தாயிரம் வேண்டும் கேஸ் ஆர் கிரடிட் கார்ட் அக்சப்டட் என்று எழுதி வைத்திருக்க..

பல்லைக் கடித்தவன்" ஏய் எதுக்குடி என் பணத்தை எடுத்த ஐயோ ஐயோ வீட்டுக்கு அட்வான்ஸ் கொடுக்க வச்சிருந்த ஐம்பதாயிரம் ரூபாயை ஆட்டைய போட்டிருக்க.. நீ உருப்படுவியாடி பணம் என்ன மரத்திலயா காய்க்குது..நான் கஷ்டப்பட்டு சேர்த்த காசுடி.. இப்படி நாலு கர்சீப் வாங்கிட்டு வந்து அதையும் வெட்கமே இல்லாம என் முன்னாடி போட்டுட்டு அலையிற "

"இங்க பாரு மாம்ஸ் உனக்கு டப் பயிற்சி கொடுக்க வேண்டியிருக்கு உன் உணர்வுகள் கிட்டதட்ட கோமா ஸ்டேஜிக்கு போயிடுச்சி அதனால இப்படியெல்லாம் டிரெஸ்

போட்டா ஒருவேளை
உனக்கு ஏதாவது
தோணலாம் உன்னோட
நலனுக்காகத்தான் இது..
இதுக்கெல்லாம் உங்க
அப்பனா
செலவழிப்பான்..அத விடு
உனக்கு ஏதாவது தோணுதா
"என்று உடலை ஒயிலாக
நெளிக்க.. முட்டி நின்ற
கலசங்கள் அவன் நெஞ்சில்
பட்டும்படாமல் உரசி விட்டு
செல்ல..

ம்மா என்று தன் நெஞ்சை
தடவியவன் அவளை
நிமிர்ந்து பார்க்க அவளோ
அவ்வளவுதான் என்பது
போல் கால்மேல் கால்
போட்டு உட்கார்ந்து
கால்களுக்கு கீரிம் பூச..
மதன் கண்கள் அவள்
தொடைகளின் கவர்ச்சியை
கண்கொட்டாமல் பார்க்க..

காமதேவன் ரதியிடம் "பய சரண்டர் ஆகிடுவான் போல ஜஸ்ட் காலுக்கே இப்படி ஜொள் அருவி கொட்டுறான்"..

"பஞ்சையும் நெருப்பையும் பக்கத்தில் வைத்தால் பக்கென்று பத்திக்கத்தான் செய்யும் அதிலும் அம்பா விவரமானவள் தீப்பொறியாய் அவனை சீண்டி விட்டு இனி அது காட்டுத்தீயாக பரவ போகிறது.. இன்று முதல்நாள் பயிற்சியிலேயே அவள் மடி தேடி ஓடி விடுவான் போல"..

"ஹாஹா பார்க்கலாம் மதன் மன்மதனாக மாறி அவளை சிறை எடுக்கிறானா என்று நாம் வேடிக்கை பார்ப்போம் "..

சரி என்று காமனோட அவர்களை நோக்க..

மாயா அவனை கண்டு கொள்ளாமல் கட்டிலில் நிமிர்ந்து படுக்க

பதறிய மதன்" ஏய் பயிற்சி இதுவரை போதும் படுக்கிறது தனித்தனியே படுக்கலாம்"..

"மாம்ஸ் இதுதான் முக்கியமே நீ கல்யாணம் ஒருவேளை கட்டிக்கிட்டா பொண்டாட்டிய தனியா படுக்க சொல்ல முடியுமா? அதனால இப்பவே என்கூட படுத்து பழகிட்டா உனக்கு பின்னாடி சங்கோஜமா இருக்காது.. இதுவும் உன் நல்லதுக்குதான் அப்புறம் உன் இஷ்டம் "என்று தன் கால்களை படுத்து கிடந்து ஆட்ட..

மதனுக்கு முள்ளின் மேல் இருப்பது போலிருந்தது.. அவள் அழகுகள் அவனை ஏதோ செய்தது .. அதை மிஞ்சிய பயம் வேறு.. இவள் நம் உலகில் உள்ளவள் கிடையாது ஒருவேளை காதல் வந்துவிட்டால் என்ன செய்வது.. இப்படி ஒரே அறையில் படுத்து தவறிவிட்டால் நான் கண்ட்ரோலாதான் இருக்கேன் ஆனா இவ சரியில்லை அங்கங்க காட்டி மயக்கப் பார்க்கிறா.. இவ்வளவு நாள் இந்த உணர்வுகள் வரலயே ஏன்? இவள பார்த்ததுல இருந்துதான் என் உடம்புல ஏதோ மாற்றம் நடக்குது ஒருவேளை வசியம் பண்றாளா.. நோ அதுக்கு இடம் கொடுக்க கூடாது .. நாம எவ்வளவு

கண்ட்ரோல்னு அவளுக்கு காட்டணும்.. அப்படி என்ன பண்ணிட முடியும் நம்மள என்று நினைத்தவன் பெட்டில் ஒரு ஓரத்தில் படுக்க..

ஹாஹா மாம்ஸ் பரவாயில்லையே தெறிச்சு ஒடுவன்னு நினைச்சேன் பக்கத்தில  படுத்துட்ட.. சரி அடுத்த பாடம் போவோமா?

டக்கென அவள் பக்கம் திரும்பி படுத்தவன் அது என்ன பாடம்

அதுவா முத்த பாடம் நான் முத்தம் கொடுக்குறேன் நீ முடிஞ்சா திருப்பி தா.. இல்லயா சொல்லி தர்றதை அப்படியே பண்ணு ஏதாவது உணர்வு வருதான்னு பார்ப்போம்..

ஆஹா இவள் எங்கேயோ
செல்கிறாள்.. பயிற்சி என்று
சொல்லி நம்மை
குடும்பஸ்தனாக்க
நினைக்கிறாள் விலாங்கு
மீனாக நழுவிவிடு என்று
மனம் எச்சரிக்கை விடுக்க..
ஆனால் பிச்சைக்கார
புத்தியோ ஓசியில கிடைக்க
போவுது என்னதான்
பண்றான்னு பார்ப்போம்
உன்ன   மீறி என்ன
நடந்திடும் என்று தெம்புட்ட..
உடலோ கொதிநிலை நூறை
தாண்டி சென்று
கொண்டிருந்தது..
முதல்முதலாக ஒரு
பெண்ணருகில் படுத்து
கிடப்பதால்..

மாயாவுக்கு நன்றாக
புரிந்தது அவனுக்கு
தன்மேல் ஈர்ப்பு
வந்துவிட்டது ஆனால்

தன்னை
நிலைப்படுத்தப்
பார்க்கிறான் என்று..

மாம்ஸ் இந்த ஜென்மத்துல
உனக்கு பொண்டாட்டி
நான்தான் வேற எவளும்
உன் பக்கத்தில நெருங்க
நான் விட மாட்டேன்.. நீ
இப்படி கட்டுபாடா இருந்து
எவளுக்கும் உன்
கன்னித்தன்மையை
கொடுக்க முடியாது..
அதுக்காகவா நான்
இத்தனை வருடம்
காத்திருந்தேன்.. உன்
குழந்தையை என் கருவில்
சுமந்து உன்னோடு
மனைவியாக வாழ்ந்து
மடிவேனேத் தவிர வேறு
ஒருத்திக்கு உன்னை
தாரைவார்த்து கொடுக்க
நான் என்ன முட்டாளா.. அது
நடப்பதற்காக உன்னிடம்

தாசி பட்டம் வாங்கினாலும் பரவாயில்லை ஆனால் உன்னை விடுவதாய் இல்லை இன்று மயங்கவில்லை என்றால் நாளை இந்த ஆடையும் இல்லாமல் உன் முன் வருவேன்.. என் தேவை நீ என்னோடு கலக்க வேண்டும் அப்போதுதான் என்னால் உன்னோடு வாழ முடியும் ..இப்போது உன் குழந்தைக்கு தாயாவேன்.. அதேபோல் சீக்கிரமாக உன் காதலையும் பெற்றுவிடுவேன்" என்று மனதில் சபதம் எடுத்தவள் தன் காதலை அவனிடம் சொல்லியிருந்தால் பிரச்சனை முடிந்திருக்கும் ..

அவள் செய்த தவறு எங்கே மதன் தன் காதலை சொன்னால் வேற்று

உலகத்து பெண்ணோடு எப்படி வாழ்வது என நினைத்து இங்கே தங்ககூட விட மாட்டானோ என நினைத்தாள்.. அவன் தேவையை சொல்லிதான் அவனை நெருங்க வேண்டும்.. உருவம் வந்தபிறகு காதலை சொல்லி விடலாம் என நினைத்தாள்

அவன் பக்கம் சென்று நெருங்கி படுத்து அவன் விரல்களோடு விரல் சேர்க்க..

மதன் "இதெல்லாம் வேண்டாம் மாயா" என்று நகர பார்க்க..

"பயிற்சி பண்ணினாதான் உன் ஸ்டேஜ் எதுன்னு தெரியும்" என்று கிசுகிசுக்க..

"இது தப்புன்னு தோணுது" ..

"இப்படியே பயந்தா நீ காலத்துக்கு கல்யாணம் பிள்ளைக்குட்டின்னு வாழ முடியாது"...

"ஏய் அப்படியெல்லாம் சொல்லாத.. சரி கொஞ்சம் கொஞ்சமா சொல்லி தா" ..

ம்ம் என்றவள் அவன் மீது ஏறி படற.அவன் அப்படியே கண்களை மூடிக்கொண்டு கை விரல்களை பொத்திக்கொள்ள..

தலையில் அடித்து கொண்டவள் அசமந்தம் இவன கரெக்ட் பண்றதுக்குள்ள ஔவையார் ஆகிடுவேன் போல.. என்று அவனை திட்டியவள்.. அவன் காது பக்கத்தில்..

"என்னோட இடுப்பு

சும்மாதான் இருக்கு உன் கையை அங்ககூட வைக்கலாம்" என்று அவன் கைகளை எடுத்து தன் வெற்றிடையில் வைக்க..

ம்ம் என்றவன் அவள் இடுப்பில் கையை சும்மா வைத்திருக்க..

"அய்யோ ராமா நீட் எக்ஸாம் கூட எழுதி பாஸ் பண்ணிறிவேன் போல இவன் ரொம்ப பண்றானே.. எங்க பண்றான் பண்ணாம படுத்துறான்" என்று திட்டிகொண்டே அவனை அணைத்து தன் கன்னத்தால் உரசி..

"மாம்ஸ் ஏதாவது பீல் வருதா".. என்று கேட்க..

அவனோ ஸ்ரீராம ஜெயம் சொல்லிக்

கொண்டிருந்தான் உணர்ச்சிகளை அடக்க..

"ஆ.. ஆ.. உன்ன எவ்வளவு கஷ்டப்பட்டு உனக்கு பீல் வர வைக்க டிரை பண்றேன் நீ ஸ்லோகம் சொல்ற இனி நோ பேச்சு ஓன்லி ஆக்சன்" என்றவள் அவன் உதடுகளை கவ்வ.. முட்டை கண்களை திறந்து பார்த்த மதன் அவளை தள்ளிவிட பார்க்க அவளோ தப்பும் தவறுமாக முத்தம் கொடுக்க..

மதனுக்கே சிரிப்பு வந்துவிட்டது.. அவனுக்கு உணர்வுகள் வராதே தவிர இதல்லாம் படங்களில் பார்த்திருக்கிறான் .. ஏதோ தெரிந்தவள் மாதிரி பேசினா உதடு என் உதட்டுக்குள்ளவே போகலை முத்தமே கொடுக்க

தெரியலை தீப்பெட்டிய தீக்குச்சி வச்சி உரசுற மாதிரி உரசிகிட்டிருக்கா.. தர்றத பச்சக்னு ஒழுங்கா தாடி என்று கத்த வேண்டும் போலிருந்தது.. அவளை தன்னோடு இறுக்கி கொண்டு அவள் தரும் முத்தத்தை வன்மையாக கையாண்டு மூச்சிமுட்ட முட்ட இதழ்கள் வலிக்க கொடுக்க வேண்டும் போல் உடல் தகிக்க ஆரம்பித்தது.. கைகள் அவளின் பருத்த மேடுகளை கையாடல் செய்யும்  திருடனாக மாற சொன்னது.. காதல் இருவருக்கும் இல்லாமல் உடலால் இணைந்தால் அது தவறு  என்று  நல்ல ஆண்மகனாக சலனத்தை மறைத்தவன்  அவளை கீழே படுக்க போட்டவன் அவள் மேல் ஏறி படந்து..

"டீச்சர் முத்தபாடம் உங்களுக்கு சரியா  சொல்லி தர தெரியலை ...தப்பு தப்பா சொல்லி தந்தா நான் பெயில் ஆகிடுவேன் .. நீங்க முதல்ல நல்லா கத்துக்கிட்டு எனக்கு சொல்லி தாங்க.. மக்கு டீச்சர்" என்று அவள் இடையை பிடித்து கிள்ளிவிட்டு அவளை விட்டு தள்ளி போக..

"மாம்ஸ் போகாத நானே உங்கிட்டதான் பழகுறேன் இனி கரெக்டா கொடுக்கிறேன் வாடா அது சூப்பரா இருந்துச்சி இப்படி இடையில போறியே நியாயமா.. எனக்கு தெரியலன்னா நீ சொல்லி தாடா..  சத்தியமா உணர்ச்சி வரலையா" என்று கத்த..

"எனக்கு உங்கிட்ட ஏதும்

தோணலடி தோணினா வர்றேன்" என்று சொல்லிவிட்டு சென்றவன் உதடுகள் சிரித்தது.. அவளை விட்டு வெளியே வந்தவன் தன் இதழ்களை விரல்களால் தடவியவன்..

"சோ சுவீட் கிஸ் .. இன்னும் கொஞ்ச நேரம் இருந்திருந்தா கண்டிப்பா எல்லாம் முடிஞ்சிருக்கும் .. அவளுக்கு என் குழந்தை வேணும் என் காதல் வேண்டாமா.. உன்னை காதலிக்கிறேன் என்று உன் வாயால் சொல்.. உன்னோடு கடைசி வரை வருவேன் என்று சொல்.. என்னை வேறு ஒருத்திக்கு விட்டு கொடுக்க மாட்டேன் என்று சொல் உன்னோடு ஓராயிரம் முறை கலக்குறேன் பெண்ணே.. ஆனால் நீ எனக்கானவளாக

என்னோடு இறுதிவரை இருப்பேன் என்று சொல்ல வேண்டும்" என்று நினைத்தவன்.. ஹாலில் சென்று படுக்க..

மாயாவோ "ச்சை சரியான மரக்கட்டையா இருக்கானே இப்படி ஓடிட்டானே.. டேய் இப்படி ஹிந்தி நடிகை மாதிரி டிரெஸ் போட்டும் உனக்கு உணர்வு வரலையா.. அவனே வாயால சொன்னானே நான் அதுக்கெல்லாம் சரிபட்டு வரமாட்டேனென்று உண்மைதானோ அவனை புலம்ப வைக்கலான்னு பார்த்தா.. நம்மள புலம்ப வச்சிட்டானே" என்று எழும்பியவள் அவனை தேடி பின்னாடி போக..

அவனோ ஷோபோவில்

குப்புற படுத்துக் கிடக்க..

கோவம் கொண்டவள் அவன்
முதுகு பக்க டீசர்ட்டை
தூக்கி அவள் உடலை
உள்ளே நுழைந்து அவன்
வெற்று முதுகில் படுக்க..

அவள் புலம்பியதை முழித்து
கிடந்து கேட்டு
கொண்டிருந்தவன் அவள்
ஹாலிற்கு வருவும்
தூங்குவது போல் நடித்தவன்
என்ன செய்கிறாள் என்று
பார்ப்போம் என்று
காத்திருக்க அவளோ அவன்
ஆடைக்குள் நுழைய..
திடுக்கிட்டான்
உடலெல்லாம் போதை ஏறி
நின்றது உள்ளே வந்தவள்
சும்மா வரவில்லை உடலில்
ஒட்டு துணையின்றி வந்து
அவன் உடலோடு ஒட்டி
கொள்ள.. இத்தனை நாள்

வேலை நிறுத்தம் செய்த
நரம்புகளெல்லாம்
இவளுக்காகதான்
காத்திருந்ததா என்பது
போல் தெறித்து கொண்டு
வெளியே வர.. இங்கு
காமதேவன் தன் வேலையை
செம்மையாக செய்ய ..
மாயா விரல்கள் அவன்
வயிற்றில் படற.. தாங்கவே
முடியாது இவள் எந்த
உலகத்தை சேர்ந்தவளாக
இருந்தால் என்ன.. இவளே
இனி எனக்கு உடையவள்..
இவ்வளவு நாள் வராத
உணர்வுகள் இவளிடம்
ஓட்டுமொத்தமாக
பிறக்கிறதென்றால் என்ன
அர்த்தம் இவளே என்
உற்றவள் என்றுதானே
அர்த்தம்.. நீ கேட்ட
குழந்தையையும் தருகிறேன்
கேட்காத காதலையும்
தருகிறேன்.. என்று

நினைத்தவன் அவளை இழுத்து தனக்கு கீழே தூக்கி போட்டவன் அவள் உதடுகளை கொய்ய ஆரம்பிக்க.. இன்பமாக அதிர்ந்தவள் அவன் முகத்தை பார்க்க..

"பயிற்சி வேலை செய்யுது போல நான் உங்கிட்ட பண்றேன் ஒகேவா பாரு .. எனக்கு சரின்னு படுற வர உங்கிட்ட பண்ணிட்டு அதுக்கு பிறகு கல்யாணம் கட்டிக்கிட்டா எனக்கு பயமில்லாம இருக்கும் பாரு" என்று அவள் முகம் பார்க்க.. வஞ்சி முகம் வாடிவிட்டது.. என்னை இதற்கு மட்டும் பயன்படுத்திவிட்டு விட்டுவிடுவானா என்று கலக்கமாக அவனை பார்க்க..

"உனக்கு தேவை குழந்தைதானே மாயா குழந்தை.. கண்டிப்பா வந்திடும் உருவமும் வந்திடும் .. நீ சொன்ன மாதிரி உனக்கும் லாபம் எனக்கும் லாபம்" என்று அவள் கழுத்தில் முகம் புதைக்க..

இல்லை அது என்று அவள் திணற.. அவனோ நான் சொல்லி முடித்துவிட்டேன் என்று அவள் உடலில் தன் விரல் தடங்களை பதிக்க ஆரம்பிக்க..

முதன்முதலில் ஆடவன் தன் உடல் வீணையை மீட்ட அதன் ரிதத்தில் அவள் முனங்க.. அவனுமே அதே நிலையில்தான் இருந்தான் இவளே என் மனைவி என்று மனதில் நினைத்தவனுக்கு

அதன் பிறகு அவள் உடல்
தொட
தயக்கமில்லாதிருக்க..
ஓட்டுமொத்த தாகத்தையும்
அவளிடம் தணிக்க
ஆரம்பிக்க.. வேட்கையில்
அவளை வேட்டையாட
ஆரம்பித்தான்.. கைகளும்
உதடுகளும் எல்லைகள்
கடந்து உடுருவ..

அம்மம்மா ராஜசுகம்
கண்டாள் பெண்..
மென்மையாக அவளுள் தன்
சொர்க்க வாள் சொருகி தன்
காதல் களியாட்டத்தை
தொடங்க..

மாயா திகைத்தாள்
இவனுக்கா உணர்வு
வரவில்லை  அவ்வளவு
வேகம் அவனிடம்.. தன்
உயிர்நீரை அவளுக்கு
கொடுத்து விட்டு அவள்

மேல் விழுந்தவன்

"எனக்கென்னவோ இந்த தடவை செஞ்சது சரியா தப்பான்னு தெரியலை வா இன்னொரு தடவை சரியா டிரை பண்ணலாம்" என்று அவளை தன் மேல் தூக்கி போட்டு மீண்டும் அவளை தனக்கு சேவை செய்ய சொல்லி அவளுள் புதைய ஆரம்பித்தான்..

காணாத கழுதை கஞ்சைக் கண்டா ஓயாம துவையல் அரைக்குமாம் அது போல மதன் ஆகி போனான்.. ஆபீஸுக்கு லீவ் போட்டவன்.. மாயாவை விலகாமல் தன் தேடலை தொடங்கி விதவிதமாக பலரகமாக அவளை படுக்கையில் உணர்ந்தவன் தன் காதலை மறைத்தான்

ஒவ்வொரு தடவையும் அவளோடு காதலோடு கூடினான்.. கூடி முடித்ததும் இப்படி பண்ணினா என் பொண்டாட்டிக்கு பிடிக்குமா ? உனக்கு தேவை குழந்தை மட்டும்தானே என்று கூறி கூறி அவளை வதைத்தான்..

அவன் தன்னிடம் எதிரிப்பார்க்கிறான் என்பது தெரியாமல் போக.. அவன் தன்னை விட்டு போய்விடுவானோ என்று பயப்பட ஆரம்பித்தாள்.. ஆனாலும் அதை வெளியே காட்டாமல் அவனோடு ஐக்கியமாகவே இருந்தாள்..

காலையில் அவள் குளித்து கொண்டிருக்க கதவு தட்டபட்டது .. இவ்வளவு நாள் யாரையும் உள்ளே அனுமதித்தது இல்லை

யோசனைமாக கதவை திறக்க தாவி அணைத்து கொண்டான் சுரேஷ்

என்ன மச்சி ஆபிஸுக்கு வரல  என்று சோகமாக சோபாவில் அமர்ந்து" வீடெல்லாம் ரொம்ப நீட்டா வச்சிருக்கியே எனக்கு தெரியாமல் கல்யாணம் கட்டிக்கிட்டியா?"

" இல்ல மச்சி ஒருத்தி கூட லிவிங் டூகதர்ல வாழ்ந்துகிட்டு இருக்கேன்" என்று அவனுக்கு சளைக்காமல் இவனும் பதில் சொல்ல

"அது கூட பரவாயில்லை மச்சி நோ கமிட்மெண்ட் ஆனா கல்யாணம் செய்றதுதான் மிகப்பெரிய வரலாற்று சாதனை"..

ஏண்டா அவ்வளவு
விரக்தியா பேசுற ..

"அதை ஏன்டா கேக்குற
நேத்து எங்க அப்பா ஒரு
பொண்ணு பாக்க கூட்டிட்டு
போனாரு.. அவர் கேட்க
சொன்னததான்டா
கேட்டேன்.. வீட்டுக்கு
வந்தவுடனே அடி
வெளுத்துட்டார் "

"அப்படி அவர் என்ன
சொன்னார் நீ என்ன செஞ்ச
அத மொதல்ல விளக்கமா
சொல்லு .. நீ எப்போதுமே
சொன்னதை செய்ய
மாட்டியே.. நீயா ஒன்னுதான
செய்வ "என்று தன்
நண்பனை அறிந்து கேட்க

"எங்க அப்பா நீ நல்ல
வேலையில இருக்க
அதனால பொண்ணு வீட்ல
ஒரு கார் கேளுன்னு

சொன்னார் "

"நானும்  அவர் சொன்னதை தான்டா கேட்டேன் ஆனா அவர் உண்மை காரை சொல்லியிருக்காருடா.. நான் ரிமோட் கார்  நாலு பேட்டரியோட வாங்கித் தாங்க.. அதுவும்  எவ்ரிடே பேட்டரி கேட்டேன்டா " என்று சொல்ல

மதன் உருண்டு விழுந்து சிரித்தான்.. நீ அல்டிமேட் அதுக்கு பொண்ணு வீட்டுக்காரங்க என்னடா சொன்னாங்க

"அவங்க என்ன மேலும் கீழும் பார்த்த பார்வையிலேயே தெரிஞ்சிப்போச்சு எப்படியும் பொண்ணு கொடுக்க போறதில்லைன்னு அதான்

காபியை குடுச்சிட்டு
வெளிய வந்துட்டேன்"..
அப்போது குளித்துவிட்டு
வெளியே மாயா வர
அவளை பார்த்ததும் மதன்
இங்கே வா என்று மோகமாக
அவளை தன் மடியில் அமர
சொல்ல அவளும் ஆசையாக
அவன் மடியில் அமர்ந்து
கொண்டு தோளில் சாய்ந்து
அவன் சட்டை பட்டனைத்
திருக..

மதன் சுரேஷிடம் ஆபிஸ்
விஷயங்களை பேசி
கொண்டிருந்தவன் சரி
என்ன விஷயமா என்ன
பார்க்க வந்த..

உங்க அப்பா போன்
போட்டார் அந்த பொண்ணு
ஓகேவா இல்லை
வேண்டாமான்னு கேட்டுட்டு
வர சொன்னார் என்றதும்

மாயா திடுக்கிட்டு அவனை பார்க்க..

இன்னும் காதலை சொல்லாமல் ஆட்டம் காட்டுகிறாயா உன்னை அலற விடுகிறேன் என்று நினைத்து

எனக்கு டபுள் ஒகே மச்சி பொண்ணு செமயா இருந்திச்சி .. அடுத்த மாசமே கல்யாணம் வைக்க சொல்லு என்று சுரேஷிடம் முடிவை சொல்லி அனுப்ப..

மாயா  உடைந்து விட்டாள் அப்படியே ஷோபாவில் படுத்து கொள்ள..

உள்ளே வந்த மதன் அவளை தூக்கி கொண்டு அறைக்கு சென்று தன் தேடலை தொடங்க..

மாயா வேண்டாம் எனக்கு

டயர்டா இருக்கு..

"ஏய் அப்படி சொல்லாத ஒரு மாசத்தில கல்யாணம் நிறைய வோர்க்கவுட் பண்ண வேண்டிருக்கு.. அதோட உனக்கு கரு பிடிக்க இன்னும் பல தடவை டிரை பண்ணனும் வா.. பின்ன நீ எனக்கு தந்த கம்பெனிக்கு உனக்கு கூலி தரலைன்னா எப்படி  என்று அவளை ஆள ஆரம்பித்தான்"..

திருமண  நாட்கள் நெருங்க நெருங்க மாயா பயத்தில் திரிந்தாளே தவிர காதலை சொல்லாமலிருக்க..

அவனோ படுக்கையே கதியென்று அவளை புரட்டி எடுத்தான்..

திருமணத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு தன்

வீட்டிற்கு செல்ல வேண்டும்
நீயும் என் கூடவே வா
என்னோடவே இரு
உன்னதான் யாருக்கும்
தெரியாதே .. அவளும்
ஒருகரையில இருக்கட்டும்
நீயும் ஒருகரையில இரு..
உனக்கு பிள்ளை
உண்டாகும் வர நான்
உனக்கு என்ன தர தயாரா
இருக்கேன் என்று மதன்
பெருந்தன்னையாக
சொல்ல..

விரக்தியாக சிரித்தவள்..
இனி அது சாத்தியப்படாது..
இன்னொரு பெண்
வந்துவிட்டாள்.. அது
அவளுக்கும் எனக்கும்
செய்யும் துரோகம் இனி
உங்கள் வாழ்க்கையில் நான்
இல்லை போய்ட்டு வாங்க"
என்றவள் அறைக்கு செல்ல..

உனக்கு உடம்பு முழுக்க கொழுப்புடி இப்பவாவது காதலிக்கிறேன்னு சொல்றியா.. இரு உன்ன என்ன பண்றேன் என்று தன் திருமண கனவுகளை அவளை சொல்லி கடுப்பேத்த..

மௌனமே உருவாக மாயா அலைய.. மதன் அவளை கண்டு உள்ளுக்குள் சிரித்தவன் தன் வீட்டிற்கு கிளம்பும் போது கையில் திருமணம் நடக்கும் அட்ரஸை கொடுத்தவன்..

"உன்னோட இவ்வளவு நாள் பாட்னரா இருந்திருக்கேன் இனி என்னோட பாட்டனர் யாருன்னு பார்க்க பிரியப்பட்டா வா ஐ திங்க் கண்டிப்பா குழந்தை உண்டாகிடுவ

இல்லைன்னாலும் சொல்லு இந்த வீட்லயே உன்ன வச்சிக்கிறேன் "என்று அவள் கன்னத்தில் தட்டிவிட்டு போனான்..

நீ வெறும் காமத்தைதானே என்னிடம் கேட்டாய்.. காதல் இல்லாமல் இணைந்தால் அதற்கு பெயர் வேறு ... என்பதை சொல்லாமல் சொல்லி சென்றான்.

தன் காதலை அவனிடம் சொல்லியிருக்கலாமோ என்று காலம் கடந்து யோசித்தாள்.. இனி தனக்கு வர போகும் குழந்தையோடு தனியாக எப்படி வாழ்வது என்று கலங்கி நின்றாள்..

மதன் திருமண நாளன்று மாயா கடற்கரையில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள்.. இனி

இந்திரலோகத்திற்கும் செல்ல முடியாது.. தன் கண்முன்னால் மதன் இன்னொரு பெண்ணோடு வாழ்வதையும் தன்னால் ஜீரணிக்க முடியாது.. முதலில் உருவம் மட்டும் வந்தால் போதும் என்று நினைத்தவள் இப்போது அவன் மொத்தமாக வேண்டும் அவனோடு சாதாரண பெண் போல் நானும் வாழ வேண்டுமென்று ஆசை வந்தது. அவன் மற்றொரு பெண்ணை மணந்த பிறகு அவன் கண்களுக்கு இவள் தெரிவாளா? என்பது சந்தேகம் மதனை நினைத்து அவள் கதறி அழ ..அப்படியே சிறிது நேரத்தில் மயங்கி சரிய.. பக்கத்தில் உள்ளவர்கள் ஓடி வந்து தூக்கினர்..

புரிந்திருக்குமே அவள் வயிற்றில் கரு உருவாகி இருந்தது.. ஆனால் இன்னும் ஒரு மணி நேரத்தில் மதனுக்கும் இன்னொரு பெண்ணுக்கும் திருமணம் கண்முழித்து பார்த்தவளுக்கு விவரம் புரிந்துவிட கடைசியாக ஒரு வாய்ப்பாக அவனிடம் ஓடிப்போய் தன் காதலை சொல்லி விடலாம் என்று வேக வேகமாக அவன் திருமணம் நடக்கும் திருமண மண்டபம் நோக்கி செல்ல..

அவள் வாசலில் படியேறவும் கெட்டி மேளம் கெட்டி மேளம் என்று ஐயர் குரல் கொடுக்க மேளங்கள் முழங்க அந்த பெண்ணின் கழுத்தில் தாலி ஏறியிருந்தது .. அவள் அப்படியே அந்த

படிகளில் உட்கார்ந்து
கண்ணீர் விட
ஆரம்பித்தாள்..

சில பெண்கள் காதல்
மற்றும் ஆண்களின் வசிய
பேச்சில் தங்களையே
இழந்து விட்டு நிற்கின்றனர்..
ஆண்கள் உல்லாசமாக
அவளை அனுபவித்துவிட்டு
சென்றுவிடுகின்றனர்..
ஆனால் பெண்ணின் நிலை ..
இங்கே மாயாதான் அவனை
குழந்தைக்காக அழைத்தாள்
என்றாலும் பாதிக்கப்பட்டு
நிற்பது பெண்தானே.. சில
ஆண்கள் மட்டுமே
மனசாட்சிக்கு பயந்து தான்
தொட்ட பெண்களை
திருமணம் செய்து
கொள்கின்றனர்.. சில
ஆண்கள் இதையே
பொழுதுபோக்காக

வைத்திருக்கின்றனர் ...
பெண்களை படுக்கையில்
பயன்படுத்திவிட்டு
காகிதப்பூவாக தூக்கி
போட்டு விடுகின்றனர்.. சில
பாதிக்கப்பட்ட பெண்கள்
செத்துமடிகின்றனர்.. சில
பெண்கள் குழந்தை
உண்டாகி வழியே
இல்லாமல் குழந்தைகளை
பெற்றெடுத்து சமுதாயத்தில்
கரை படித்தவர்களாய்
வாழ்கின்றனர்.. சிலர்
யாருக்குமே தெரியாமல்
குழந்தையைப் பெற்று
அனாதை ஆசிரமத்தில்
போட்டுவிடுகின்றனர்..
இவர்களின் ஆசைக்கு
குழந்தைகள் என்ன பாவம்
செய்தது? ஒரு ஆணும்
பெண்ணும் சட்டப்படி
திருமணம் செய்து
கொள்ளாமல் இணைவது
எப்பொழுதுமே

இயற்கைக்கு முரணானதுதான்.. இதில் ஆண்கள் கண்டிப்பாக தப்பித்து விடுவர்.. பெண்களின் வாழ்க்கை கண்டிப்பாக கேள்விக்குறியாக மாறிவிடும்.. அதனால் பெண்கள் ஜாக்கிரதையாக சிறு சலனத்திற்குகூட இடம் கொடுக்காமலிருக்க வேண்டும்.. காதலித்தாலும் கண்ணியத்தோடும் கட்டுப்பாடும் இருப்பது மிக அவசியம்.. மாயா தன் எதிர்காலத்தை நினைத்து மனம் வெந்து கதறி அழ ஆரம்பித்தாள்.. அவளும் இப்பொழுது சாதாரண பெண்தானே.. இனி சமுதாயத்தை எதிர்த்துப் போராட வேண்டும். தன் வாழ்க்கைக்கு போராடவேண்டும்..

பெண்களை துகிலுரிக்கும் ஆண்களிடமிருந்து போராட வேண்டும்.. குழந்தையை தனி ஆளாக காப்பாற்ற வேண்டும்..  ஒரு பெண் எத்தனை போராட்டங்களை சமாளிக்க வேண்டும் என்று திகைத்து முழித்தாள்

தன் தோளில் ஒரு கரம் பட நிமிர்ந்து பார்க்க .. அங்கே அழகாக புன்னகைத்துக் கொண்டிருந்தான் மதன் எட்டி உள்ளே பார்க்க அவன் தங்கை திருமணம் முடிந்திருந்தது.

அவனை ஓடி வந்து கட்டி கொண்டவள்.. "மாம்ஸ் உங்களை காதலிக்கிறேன் .. நம்ம குழந்தை". என்று வயிற்றில் கைவைத்தவள்" எனக்கு உருவம் வந்திடுச்சி இனி நானும் சாதாரண

மனுஷிதான் என்ன விட்டுடாதீங்க நீங்க இல்லாம என்னால வாழ முடியாது".. என்று ஏங்கி அழ..

"அழாதடி உனக்கு ஒருவேளை உருவமே வராமயிருந்திருந்தாலும்.. உனக்கு என்னால துரோகம் செய்ய முடியாது.. மனச ஒருத்திக்கு கொடுத்துட்டு உடம்ப ஒருத்திக்கு என்னால கொடுக்க முடியாது.. என் மனசுக்கும் உடம்புக்கும் சொந்தக்காரி நீ மட்டும்தான்.. நீ காதலை உன் வாயால சொல்லணும்னுதான் இப்படி உன்ன பயம்காட்டினேன்.. நீ வராம போயிருந்தாலும் நாளைக்கே அங்க வந்திருப்பேன்" ..

மதனை போல ஒரு சில ஆண்கள் தன் காதலுக்கும் தன்னை நம்பியவளுக்கும் துரோகம் செய்ய மாட்டார்கள்.. ஆண்களில் நல்லவனும் இருக்கிறார்கள்..  தீய நோக்கம் உள்ளவர்களும் இருக்கிறார்கள் அதை கண்டுபிடிப்பது பெண்களாகிய நம் கையில்தான் இருக்கிறது..

ஒருவன் நம்மோடு எந்த நோக்கத்திற்காக பழகுகிறான் என்பதை முதலில் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்..  ஒரு பெண்ணைக் கழுத்துக்கு கீழே பார்க்காத எவனும் நல்ல ஆண்மகன்தான் அவனை தான் சமூகம் ஆண்மையற்றவன் என்று கிண்டல் அடிக்கிறது..

மடையர்களே அவன்தான்
உண்மையான ஆண்மகன்..

பார்க்கும் பெண்
மீதெல்லாம் ஆசை வந்தால்
அவன் காமுகன்.. தனக்கு
உண்டான பெண்ணிடம்
மட்டுமே ஆசை வந்தால்
அவனே உண்மையான
காதலன்.. மதன்
உண்மையான காதலன்..
காதல் காமம் எல்லாம்
மாயா ஒருத்தியிடம்
மட்டுமே வரும் இவனே
வீரமான ஆண்மகன்..
மாயாவை தன்னோடு
அணைத்து கொண்டவன்

"எங்க வீட்ல நான் ஒரு
பொண்ண
காதலிக்கிறேன்னு
சொல்லிட்டேன் "என்று
அவளைக் கட்டிக்கொள்ள.

"ஐயோ உருவம்

இல்லாததையும் சொல்லிட்டிங்களா"..

"ஹாஹா இல்லை.. நான்தான் டுவென்டி டுவென்டி மேட்ச் மாதிரி உன்கிட்ட கிரிக்கெட் விளையாண்டிருக்கேனே.. கண்டிப்பா குழந்தை உண்டாகி உருவம் வந்திடும்னு தெரியும் .. அதுக்கு பிறகு கல்யாணம் கட்டிக்கலாம்னு நினைச்சேன்".. என்று சிரிக்க..

"சீ எனக்கு இடுப்பு வலியே வந்திடுச்சி. நீங்க அந்த விஷயத்தில மக்கு மதன்னு நினைச்சேன்.. நீங்க அந்த மன்மதனையே மிஞ்சிட்டிங்க" என்று வெட்க பட..

"உன்னை பார்த்தாதான்டி

அந்த உணர்வு இப்பவும் வருது.  வேற பொண்ணுங்க பார்த்தா சகோதர உணர்வுதான் வருது..  இப்ப கூட உனக்கு உருவம் இல்லாமயிருந்தா இங்கேயே லிப் கிஸ் கொடுக்க ஆசை வருதுடி" .. என்று அவளை கட்டி கொள்ள..

சுரேஷ்  ஓடி வந்து இவர்களுக்கு பின்னால் ஒளிந்து கொண்டு..

"மச்சி நாங்க ஒளிஞ்சி விளையாடுறோம் யாராவது என்ன தேடி வந்தா அந்த பக்கம் கைகாட்டு" என்று மறைந்து கொள்ள..

"மாம்ஸ் இவர் நைன்டி கிட் என்று நொடிக்கு ஒருதடவை நிருபிக்கிறார்.. நீங்களாவது ஸ்டாட்டிங் டிரபிள் உள்ள பார்ட்டி..  இவர்  அதிலும்

மோசம் போல"..

"உனக்கு நைன்டி கிட்
பார்த்தா சிரிப்பா இருக்கா
எங்க சோக கதையை வச்சி
ஒரு புக் போடலாம்...நோ
டிக்ஷனரி போடலாம்"

"வெள்ளந்தியானவர்கள்..
பாருங்கள் உங்கள்
நண்பர்களை, ஒருவர்
நிஜான்பாக்கு திருடுகிறார்
ஒருவர்
குழந்தைகளையோடு
தொடர்வண்டி
விளையாடுகிறார்.. ஒருவர்
பந்தி எப்போது
தொடங்குமென்று
சாப்பாட்டுக்கு ஆளாள்
பறக்கிறார் இவங்களுக்கு
இந்த ஜென்மத்தில்
கல்யாணமே நடக்க
போவதில்லை"..

"ஐய பாவம்டி  அப்படி

சொல்லாத  நல்ல பசங்க
என்ன தள்ளிவிட நீ வந்த
மாதிரி எவளாவது
இந்திரலோகத்திலயிருந்து
வருவாங்க"..

"ஹாஹா வந்தால்தான்
உங்கள் நண்பர்கள்
நால்வருக்கும் திருமணம்
இல்ல சொப்புச்சாமான்
வச்சிதான் இதுக கடைசி
வரைக்கும் விளையாடும்"..

இந்திரலோகத்தில் நான்கு
கன்னியர்கள் விளையாடி
கொண்டிருக்க தெரியாமல்
காமனும் ரதியும் இருக்கும்
இடத்திற்கு வந்து அவர்கள்
இன்ப நிலை கலைக்க..

விட்டார் சாபம்.. பூலோகம்
போங்கள்
உங்களுக்காகவே   நைன்டி
கிட் வெயிட்ங் போய்
மிங்கில் ஆகுங்கள் என்று

விரட்டிவிட பிடித்தனர்
பூலோகத்திற்கு ஓட்டம்..

இந்திரலோகத்தோடு
சம்மந்தம் இத்தோடு முடிய
போவதில்லை.. பாவப்பட்ட
நைன்டி கிட்ஸை காப்பாற்ற
இந்திரலோகத்திலிருந்து
அழகிகள் வருவர்.. சோ
மனசு விடக்கூடாது

பூலோகம் இல்லைன்னா
இந்திரலோகம் பீ ஹேப்பி ..

அதே திருமண மண்டபத்தில்
திருமணம் மதனுக்கும்
மாயாவுக்கும்   நடந்தேறி..
இப்போது காதலோடும்
காமதேவனுக்கே டப்
கொடுக்கிறான் மதன்
மன்மதனாக..

மக்களே இந்த கதை
கற்பனையே படிச்சிபுட்டு
என்னை அடிக்க தேட

வேண்டாம்..நான்
இந்திரலோகத்தில்
இருக்கிறேன்..

விடு வண்டிய
இந்திரலோகத்திற்கு...

வாழ்க வளமுடன்

நன்றி